10th July 1962]

பணத்தில் எவ்வளவு செலவிடப்பட்டிருக்கிறது? அந்த நடைபாதை எப்பொழுது பூர்த்தியாகும் என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இந்த திட்டத்திற்கு மொத்தமாக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையைத் தெரிவித்தேன். மற்ற விபரங்களுக்கு தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்லப்படும்.

திரு. கே. ஏ. மதியழகன் : வளர்ந்துவரும் சென்னை நகரின் மக்கள் தொகையை உத்தேசித்து, சிக்காகோ நகரில் இருப்பது போன்று மாற்றுப் பாதைகளை அமைக்கும் திட்டம் சர்க்கார் உத்தேசத்தில் இருக்கிறதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இப்பொழுது அப்படி ஒன்றும் திட்டமில்லை

அரக்கு உற்பத்தி.

* 210 கேள்வி.—**திரு. ம. கமலநாதன் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்திலிருந்து மதுரை மாவட்டம், கும்பத்திற்கு மாற்றப்பட்டிருக்கும் அரக்கு உற்பத்தி தொழிற்சாலையை மீண்டும் சேலம் மாவட்டத்திற்கு மாற்ற உத்தேசமுண்டா ?

(இ) இல்லையெனில், சேலத்தில் புதிய அரக்கு உற்பத்தித் தொழிற்சாலை ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

THE HON. SRI N. NALLA SENAPATHI SARKARAI MANRADIAR : (அ) &(இ) No, Sir.

* 211 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the quantity of lac produced in the Madras State; and

(*b*) whether there is any programme for the production of lac in the State and, if so, the details thereof?

THE HON. SRI N. NALLA SENAPATHI SARKARAI MANRADIAR : (a) About 305,000 lb. of scraped lac was produced between 1956–57 and 1961–62.

(*b*) In addition to the nine lac farms opened under the Second Five-Year Plan, six more centres were opened in 1961–62 under the Third Five-Year Plan.

திரு. ம. கமலநாதன் : " இல்லை " என்ற பதில் எதிர்பார்க்கப்பட்டது தான். சேலத்திலே புதிய அரக்கு உற்பத்தி தொழிற்சாலை ஏற்படாததற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அதற்கு வேண்டிய கச்சாப் பொருள்கள் எல்லாம் சென்னையிலேதான் சுலபமாகக் கிடைக்கின்றன. ஆகவே, அதை சேலத்தில் ஏற்படுத்துவதாக இல்லை என்று முடிவுக்கு வந்திருக்கிறோம்.

Medical College for Salem

* 212 *Q.*—SRI MUNU. ADHI (on behalf of Sri M. V. KARIVENGADAM) : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government have received a copy of the resolution from the Salem District Development Council about the starting of a Medical College at Salem ; and